OS 134/2019

வா.சா. 2 சுப்பாராவ் த/பெ வெங்கடேஸ்வரலு

நாள் 09.07.2025

**குறுக்கு விசாரணை**

1. யார் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் முருகனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முருகன் மற்றும் கேரண்டி கொடுத்தவர்கள் மீது போடப்பட்டுள்ளது. கேரண்டி கொடுத்தவர்கள் பெயரை சொல்லமுடியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி என்ன வகையான வங்கி கணக்கு வைத்திருந்தார் என்றால் சேமிப்பு கணக்கு வைத்திருந்தார். சேமிப்பு கணக்க அடிப்படையில் தான் கடன் வழங்கப்பட்டதா என்றால் ஆமாம். பிரதிவாதி எவ்வளவு தொகை கடன் வாங்கினார் என்றால் ரூ.9,75,000/- தொகைக்கு கடன் வாங்கினார். பிரதிவாதிக்கு எதன் அடிப்படையில் கடன் கொடுக்கப்பட்டது என்றால் அடமான கடன் பத்திரத்தின் அடிப்படையில் கடன் கொடுக்கப்பட்டது. வழக்கு கடனுக்கு முன்னர் பிரதிவாதி வேறு ஏதேனும் கடன் வாங்கியிருக்கிறாரா என்றால் பயிர் கடன் வாங்கியிருக்கிறார். ஏற்கனவே பயிர்கடன் வாங்கியதாக வழக்குரையில் விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி ஏற்கனவே வாங்கிய பயிர் கடன் தொகை எவ்வளவு என்றால் அதுபற்றி சரியான விவரம் தெரியாது.

2. பயிர்கடன் எவ்வளவு செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு சரியாக சொல்லத்தெரியாது. பொதுவாக வங்கியில் ஏற்கனவே நிலுவையில் உள்ள கடனை திரும்பி செலுத்தாவிட்டால் புதிய கடன் வழங்கமாட்டார்கள் என்றால் அதுபோன்று வழங்கமாட்டார்கள். இந்த வழக்கின் பிரதிவாதி தொடர்ந்து கடனை திருப்பி செலுத்தியதால் 2வது கடன் வழங்கப்பட்டது. ஏற்கனவே பிரதிவாதி வாங்கிய பயிர் திருப்பி செலுத்திவிட்டதால் தான் வழக்கு கடன் 2வது ஆக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பயிர் கடன் புதுப்பித்தல் செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்கிறேன். வீட்டுக்கடனுக்கு பிறகு பிரதிவாதி வேறு கடன் ஏதேனும் வாங்கியிருக்கிறாரா என்றால் ஆமாம். வேறு ஒரு கடன் வாங்கியிருக்கிறார். வேறு கடன் எதன் அடிப்படையில் வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரு கடன் நிலுவையில் இருக்கும் போது மற்றொரு கடன் கொடுக்கக்கூடாது என்று ஆர்பிஐ விதிகள் உள்ளது என்றால் கடனை திருப்பி செலுத்தாமல் நிலுவையில் இருந்தால் வேறு கடன் வழங்க மாட்டோம். கடனை தொடர்ச்சியாக செலுத்தி வந்தால் வேறு கடன் வழங்குவோம்.

3. பிரதிவாதி பயிர் கடனை திருப்பி செலுத்திவிட்டதால் தான் வீட்டு கடன் ரூ.9,75,000/- வழங்கப்பட்டது என்றாலும் வீட்டு கடனை செலுத்திவிட்டதால் தான் மற்றொரு கடன் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த தேதியில் வீட்டு கடன் வாங்கினார் என்றால் 2015ல் வாங்கினார். எந்த மாதம் வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியவில்லை. வீட்டு கடன் ஒரே தவணையாக வழங்கப்பட்டதா அல்லது தவணை முறையில் வழங்கபட்டதா என்றால் தவணை முறையில் வழங்கபட்டது. வழக்குரையில் தவணை முயைில் கடன் வழங்கப்பட்டதாக சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லப்பட்டுள்ளது. கடன் எண் குறிப்பிட்டு செலுத்தப்படும் தொகை வேறு கடனுக்கு ஈடு செய்யப்படுமா என்றால் இல்லை. எந்த லோன் அக்கவுண்டிற்கு செலுத்தப்படுகிறதோ அந்த அக்கோண்டிற்கு தான் வரவு வைக்கப்படும். பிரதிவாதி குறிப்பாக

லோன் கணக்கு எண் குறிப்பிட்டு கட்டிய தொகையை எங்கள் வங்கி வேறு லோன் கணக்கிற்கு ஈடு செய்தது என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி இதுவரையிலும் எவ்வளவு தொகை கடனுக்காக திருப்பி செலுத்தியிருக்கிறார் என்ற விவரம் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பொதுவான முறையில் குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கு உரிய நேரத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் ஆமாம். பிரதிவாதியிடம் ரூ.2,00,000/- கட்டும்படியும் மீதி உள்ள 5 லட்சத்தை தள்ளுபடி செய்துவிடுவதாக எங்கள் வங்கி தரப்பில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி 2லட்சம் கட்டியதற்கான ரசீது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி இதுவரையில் 7லட்சம் திருப்பி செலுத்தியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி ரூ.5,50,000/- மீதி தொகையான செலுத்த தயாராக உள்ளார் என்றாலும் வழக்கை முடித்து கொள்ள சம்மதமா என்றால் அதுகுறித்து என்னால் முடிவு செய்ய முடியாது மேல் அதிகாரிகள் தான் முடிவு செய்ய முடியும்.

5. பிரதிவாதி கடன் தொகையை செலுத்தி முடித்துகொள்ள தயாராக இருக்கிறார் என்றாலும் வங்கி தரப்பில் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.